**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.45/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-2 |
| Name | : | மகாலட்சுமி, வயது 45 |
| Father Name/Husband Name | : | பெரியசாமி |
| Village | : | கழுகுமலை |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தீப்பெட்டி தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of May 2024.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து தீப்பெட்டி ஆபிசில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்த பெரியசாமி எனது கணவர். அ.சா.1 எனது மகன். எதிரியை தெரியாது. கடந்த 20.05.2023 ஆம் தேதி இரவு 09.10 மணிக்கு எனது மகன் எனக்கு போன் செய்து அப்பா கழுகுமலை – சிவகாசி ரோட்டில் ஆஞ்சநேயர் கோவில் அருகே நடந்து வந்து கொண்டிருந்தபோது ஒரு நபர் இருச்சக்கரவாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்.
2. பின்னர் என் கணவரை பார்க்க கோவில்பட்டி சசி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு மூளையில் காயம் ஏற்பட்டிருந்ததால் திருநெல்வேலி அரசுமருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னததின் பேரில் ஆம்புலன்ஸ் மூலம் 11.00 மணிக்கு திருநெல்வேலி மருத்துவமனையில் சேர்த்தோம்.
3. அங்கு அவர் சுயநினைவு இன்றி இருந்தார். பின்னர் அங்கு வந்த போலிசார் என்னையும் என் மகனையும் விசாரித்தார்கள். அவர்களிடம் என் மகன் புகார் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். மறுநாள் இரவு 08.20 மணிக்கு என் கணவர் சிகிச்சை பலன் இன்றி இறந்ததாக சொன்னார்கள். என் கணவரின் உடல் மீது பிரேத விசாரணை செய்தார்கள் உடன் இருந்தேன். பிரேத பரிசோதனைக்கு பிறகு என் கணவரின் உடலை பெற்றுக்கொண்டேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீங்கள் கழுகுமலை அரசு மருத்துவமனைக்கு போனீர்களா என்றால் நான் போகவில்லை. இதய அறுவை சிகிச்சை செய்த பின்னர் உங்கள் கணவர் தினமும் மருந்து மாத்திரைகள் உட்கொண்டார் என்றால் ஆம். நேரம் தவறாமல் சொன்ன அளவில் மருந்துகள் உட்கொள்ள வேண்டி மருத்துவர் ஆலோசனை வழங்கினார்கள் என்றால் சரிதான்.
2. நீங்கள் சொன்ன நேரத்தில் அ.சா.1 உங்களுக்கு தகவல் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் கேள்விப்படவில்லை என்றாலும் சரியல்ல. மருத்துவமனைக்கு நீங்கள் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் உடன் இருந்து கையொப்பம் செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.
3. கழுகுமலை அரசு மருத்துவர், சசி மருத்துவமனை மருத்துவர், திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவர் ஆகிய மூவரையும் விசாரித்தால் உங்கள் கணவர் சம்பவ நேரத்திற்கு பின்னர் இறக்கும் வரை சுயநினைவுடன் இருந்தாரா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான்.
4. அதே மருத்துவர்களை விசாரித்தால் அவர்கள் எந்தவிதமான சிகிச்சை கொடுத்தார்கள் என்று சொல்வார்கள் என்றால் சரிதான். விபத்திற்கான காரணம் அதனால் ஏற்பட்ட காயம், அதனால் இறப்பு ஏற்பட வாய்ப்பு உண்டா என்பதையும்சொல்வார்கள் என்றால் சரிதான்.
5. மேற்படி மூன்று மருத்துவமனைகளில் உங்கள் கணவரை சிகிச்சை எடுத்த மருத்துவ கோப்புகளின் விவரம் இருக்கிறது என்றால் சரிதான். உங்கள் கணவருக்கு இருதய அறுவை சிகிச்சை எடுத்த விவரத்தை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சொன்னீர்களா என்றால் ஆம்.
6. விபத்து இழப்பீடு பெறவேண்டி எதிரியின் மீதும் எதிரியின் வாகனம் மீதும் பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு அனுசரனையாக பொய் சாட்சிஅளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.